செய்தி வெளியீடு எண்:181 நாள்: 26.3.2009

# பத்திரிகைச் செய்தி

கடந்த 19.02.09 அன்று சென்னை உயர்நீதி மன்ற வளாகத்தில் நடைபெற்ற சட்டம் ஒழுங்கு நிகழ்வின் போது, காவல்துறையினரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் அத்துமீறல்கள் நடந்துள்ளதா என்பது குறித்து, உரிய விசாரணை மேற்கொண்டு, அது தொடர்பான அறிக்கையினை அரசுக்கு அளித்திட, தமிழக அரசினால் நியமிக்கப்பட்ட முதன்மைச்செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் முனைவர் ந. சுந்தரதேவன் இ.ஆ.ப., அவர்கள் தலைமையிலான ஒருநபர் குழுவானது, கடந்த 24 மற்றும் 26.03.09 ஆகிய இரு நாட்களில் முதற்கட்ட விசாரணை மேற்கொண்டது.

இச் சம்பவம் குறித்து தங்களிடம் உள்ள ஆதாரங்கள் உள்ளிட்ட சாட்சியங்கள் கூறிட விரும்புவோருக்கு மேலும் ஒரு வாய்ப்பினை வழங்கிடும் பொருட்டு, வரும் ஏப்ரல் மாதம் 3ஆம் தேதியிலும் பின்வரும் முகவரியில் உள்ள அலுவலகத்தில் மாலை 3 மணி தொடங்கி 6 மணி வரையில் இக்குழுவின் விசாரணை நடைபெறவுள்ளது. சாட்சியம் கூறிட விரும்புவோர் மேற்கண்ட குழுவின் முன்பாக நேரில் வந்து அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், இவ்விசாரணை குழு தொடர்பான விவரங்களை 044 – 28523299 என்கிற தொலைபேசி எண்ணிலும் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம்.

| | |
|---|---|
| சுனாமி திட்ட மேலாண்மை அலகு,<br>கூட்ட அரங்கு,<br>5வது தளம்,<br>எழிலகம் இணைப்பு கட்டடம்,<br>சேப்பாக்கம், சென்னை 600 005 | **Tsunami Project Management Unit,<br>Conference Hall,<br>5th Floor,<br>Ezhilagam Annexe,<br>Chepauk. Chennai 600 005** |

சுந்தரதேவன்
26.3.09

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9